ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் |
| திகதி | 2020.04.09 |

## கொரோனா வைரஸ் (கொவிட் - 19) எதிர்பாராத் தாக்கம் காரணமாக முகம் கொடுக்கப்படுகின்ற சவால்களை சமூகமாக்குவதற்கான தேசிய அளவிலான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக ஒரு சிறப்பு வைப்பு கணக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையின் ஆலோசனையுடன் இலங்கை அரசாங்கமானது, நாட்டின் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) எதிர்பாராத் தாக்கத்திலிருந்து மீண்டெழுவதற்கான தேசிய அளவிலான முயற்சிகளுக்கான உதவிகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஒரு சிறப்பு வைப்பு கணக்கினை அறிமுகப்படுத்துகிறது.

**சிறப்பு வைப்புக் கணக்கின் பிரதான அம்சங்கள்**

1. **தகுதியடைய நபர்கள்**

   அ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதியும் இலங்கைப்பிரசைகள்.

   ஆ) இரட்டைப் பிரசாவுரிமையுடையவர்கள்.

   இ) இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட வேறு நாட்டின் பிரசைகள்.

   ஈ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதியும் இலங்கையரல்லாதோர்.

   உ) இலங்கைக்கு வெளியில் பதியப்பட்ட/கூட்டிணைக்கப்பட்ட நிதியங்கள், கூட்டு நிறுவன அமைப்புக்கள் மற்றும் சங்கங்கள்.

   ஊ) வேறு யாராகிலும் நலன்விரும்பிகள்.

2. **ஆகக்குறைந்த வைப்பு:** பரிந்துரைக்கப்பட்ட வரையறை இல்லை.

3. **வைப்பின் வகை:** நிலையான வைப்பு மாத்திரம்

4. **ஆகக்குறைந்த முதிர்ச்சிக் காலம்:** குறைந்தது 06 மாதம்

5. **சிறப்பு வைப்புக் கணக்கினை திறந்துகொள்வது,**

   i. இலங்கையின் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரில் (ஏதேனும் உரிமம்பெற்ற வணிக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி) சிறப்பு வைப்புக் கணக்கினை திறக்க முடியும்.

   ii. குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தலின் திகதியிருந்து அதாவது **08.04.2020** ஆறு மாத காலத்திற்குள் வங்கி முறைமையினூடாக உள்முக பணவனுப்பல்களுடன் சிறப்பு வைப்புக் கணக்கு திறக்கப்பட வேண்டியுள்ளது.

   iii. மேலே குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் உள்முக முதலீட்டுக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கிப் பிரிவு கணக்கினூடாக கிடைக்கப்பெற்ற நிதியினை சிறப்பு வைப்புக் கணக்கிற்கு மாற்றுதல்.

   iv. குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் அல்லது இலங்கை ரூபாவில். ஏற்றுக்கொள்ளக்கூடிய வெளிநாட்டு நாணயங்களாவன, ஐக்கிய அமெரிக்க டொலர்கள், யூரோ, ஸ்ரேலிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர்கள், சிங்கப்பூர் டொலர்கள், சுவீடன் குரோனர், சுவிஸ் பிராங், கனேடியன் டொலர்கள், கொங்கொங் டொலர்கள், யப்பானிய யென், டென்மார்க் குரோனர், நோர்வே குரோனர், சீனா ரென்மின்பி மற்றும் நியூசிலாந்து டொலர்கள் என்பனவாகும்.

   v. கூட்டுக் கணக்காக திறக்க முடியும்.

6. **வட்டி வீதம்** - முதிர்ச்சியில் உயர்வான வட்டி வீதம்

   - 6 மாத கால வைப்புக்களிற்கு – சாதாரண வீதத்திற்கு மேலதிகமாக ஆண்டிற்கு 1 சதவீதப் புள்ளி
   - 12 மாத கால வைப்புக்களுக்கு – சாதாரண வீதத்திற்கு மேலதிகமாக ஆண்டிற்கு 2 சதவீதப் புள்ளிகள்

7. **நிதிகளை திருப்பி அனுப்புதல்** - முதிர்ச்சியில் இலகுவாக மாற்றிக்கொள்ளக்கூடியதுடன் இலங்கைக்கு வெளியில் திருப்பியனுப்பப்படக் கூடியவை.

8. **விலக்களிக்கப்பட்டவை** - 2017.11.17 திகதியிடப்பட்ட 2045/56 இலக்கமிடப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களின் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குமுறைப்படுத்தலின் நடைமுறைத் தேவைப்பாடுகள் விலக்களிக்கப்பட்டவை.

9. **சிறப்பு வைப்புக் கணக்கு தொடர்பான மேலதிக தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது?**

   - இவ் சிறப்பு வைப்புக் கணக்கு தொடர்பாக 2020.04.08 திகதியிடப்பட்ட 2170/04 இலக்கமிடப்பட்ட அரசாங்கத்தின் (அதிவிசேட) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட 2020.04.09 திகதியிடப்பட்ட 2020ம் ஆண்டின் 04ம் இலக்க பணிப்புரைகள் என்பன (www.dfe.lk) எனும் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித்

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வெப்தளத்தில் “தரவிறக்கம்” பகுதியின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

- **பணிப்பாளர், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**, இல: 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

  தொலைபேசி : +94 112 477 255, +94 112 477 244, +94 112 477 433, +94 112 477 375
  தொலைநகல் : +94 112 477 716
  மின்னஞ்சல் : dfe@cbsl.lk

- இலங்கையிலுள்ள எவரேனுமொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

**அனைத்து இலங்கையர்களும் இலங்கை மற்றும் வெளிநாட்டில் வதிகின்ற நலன்விரும்பிகளும் இவ் இக்கட்டான காலப்பகுதியில் இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் தங்களின் நல்லெண்ணத்தின் சைகையினை வழங்குவதற்காக இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளும்படி அழைக்கப்படுகின்றனர்.**